## முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.

## OS.No - 79/2021

Date: 23.09.2025 DW.1 ( சக்திவேல் )

**பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை:**

இங்கு நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் வாக்கு மூலத்திற்கான விவரங்களை யார் சொன்னார்கள் என்றால் நான் தான் சொன்னேன். வழக்கு பதிவு செய்த வாதி அப்துல்காதர் என்பவரை எனக்கு எப்போது தெரியும் என்றால் தாவா சொத்திற்காக ஒப்பந்த பத்திரம் போட்ட அன்றுதான் தெரியும். வாதியின் மகன் பெரோஸ்கான் மற்றும் அவருடைய நண்பர் அஜ்மீர்களஞ்சியம் ஆகியோர்களை எனக்கு எப்போது தெரியும் என்றால் மேற்படி தாவா சொத்திற்காக ஒப்பந்த பத்திரம் எழுதுவதற்கு 20 நாட்களுக்கு முன்பு தெரியும். மேற்படி பெரோஸ்கான் மற்றும் அஜ்மீர்களஞ்சியம் ஆகிய இரண்டு நபர்களிடமிருந்தும் நான் அடிக்கடி பணம் வாங்கியுள்ளேன் என்று எதிருரையில் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. ஒரே ஒரு முறை தாவா சொத்திற்காக கடன் வாங்கியுள்ளதை தான் சொல்லியுள்ளேன். மேற்படி நபர்களிடமிருந்து எவ்வளவு ரூபாய் நான் கடன் வாங்கினேன் என்றால் ரூ.2,00,000/- மட்டும் தான் கடன் வாங்கியுள்ளேன். மேற்படி ரூ.2,00,000/- தொகையை யாரிடமிருந்து வாங்கினேன் என்றால் பெரோஸ்கான் மற்றும் அஜ்மீர்களஞ்சியம் இருவரும் வந்து ஒரு சேர என்னிடம் வந்து பெரோஸ்கான் என்னிடம் பணம் கொடுத்தார். மேற்படி ரூ.2,00,000/- தொகை கடன் வாங்கியதற்கு ஆதரவாக என்ன ஆவணம் நான் கொடுத்தேன் என்றால் 4 காசோலைகளும் அது தவிர பொரோஸ்கான் அப்பாவின் பெயரில் 15.03.2019 அன்று தாவா ஒப்பந்த பத்திரமும் எழுதிக்கொடுத்தேன். வா.சா.ஆ.1, ஒப்பந்த பத்திரம் 15.03.2019ல் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். அதனால் எனக்கு அனைத்து விவரங்களும் தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்தப்பத்திரத்திற்கான விவரம் யார் சொன்னார்கள் என்றால் பெரோஸ்கான் மற்றும் அஜ்மீர்களஞ்சியம் ஆகியோர்களே சொல்லி எழுதி வைத்திருந்தார்கள். வா.சா.ஆ.1 ஒப்பந்த பத்திரத்தில் உள்ள கையொப்பம் என்னுடைய கையெழுத்து என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்த பத்திரத்தில் யார் யார் சாட்சி கையொப்பம்

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.09.23 16:27:57 +0530

போட்டார்கள் என்றால் சுப்பையா மகன் செல்வம் என்பவரும் நிஜாம்அலி என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் போட்டார்கள். அதில் நிஜாம் அலி என்பவரை ஏற்கனவே எனக்கு தெரியாது. மேற்படி வா.சா.ஆ.1 ஒப்பந்த பத்திரம் ஏற்படுத்தப்படுவதற்கு முன்பு நான் என்ன பத்திரம் கொடுத்திருந்தேன் என்றால் என்னுடைய கிரைய பத்திரத்தை கொடுத்தேன். மேற்படி கிரய பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.6 ஆக இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஒப்பந்தப்பத்திரத்தில் மேற்படி கிரைய தொகையில் முன்பணமாக 1வது பார்டி தன் குடும்ப உபயோகத்திற்காக 2வது பார்டியிடம் பெற்றுக்கொண்டது தொகை ரூ.10,00,000/- மட்டும் போக பாக்கி ரூ.10,000/-ஐ 2வது பார்டி 1வது பார்டிக்கு 24 மாத தவணைக்குள் ரொக்கம் செலுத்துவதாக கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பத்திர அலுவலகத்திற்கு எத்தனை மணிக்க சென்றேன் என்றால் அன்று காலை 11.30 மணிக்கு சென்றேன். அப்துல்காதர், அஜ்மீர்களஞ்சியம் என்பவரும் எப்போது பத்திர அலுவலகத்திற்கு சென்றார்கள் என்றால் எனக்கு முன்பே அவர்கள் சென்று பத்திரம் தயார் செய்து முடித்து அவர்கள் அழைத்து பின்பு தான் நான் அங்கு சென்றேன். மேற்படி ஒப்பந்த பத்திரத்தில் உள்ள சாட்சிகள் இருவரையும் யார் அழைத்துவந்தார்கள் என்றால் பெரோஸ்கான், அஜ்மீர்களஞ்சியம். ஏற்கனவே நான் பெற்றுக்கொண்ட தொகைக்கு ஆதரவாகத்தான் ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொடுத்ததாக நான் சொல்லும் வாசகம் வா.சா.ஆ.1 ஒப்பந்த பத்திரத்தில் இல்லை என்றால் சரிதான். பத்திரம் எழுதி நாங்கள் சாட்சிகள் அனைவரும் கையொப்பம் செய்த பின்பு பத்திர பதிவாளர் என்னிடம் தொகை ரூ.10,00,000/- பெற்றுக்கொண்டு மேற்படி எழுதிக்கொடுக்கிறேன் என்று கேட்டாரா என்றால் கேட்கவில்லை. பத்திர பதிவாளரிடம் நான் ஒப்பந்தம் பத்திரம் ஏற்கனவே வாங்கிய கடனுக்காக எழுதிக்கொடுப்பதாகவும் அல்லது போலீசார் என்னை மிரட்டி பத்திரத்தில் கையெழுத்து வாங்கினார்கள் என்றோ என் ஆட்சேபனையை சொன்னேனா என்றால் சொல்லவில்லை. நான் தாக்கல் செய்த நிருபண வாக்குமூலத்தில் 5வது பக்கத்தில் வாதியின் மகனும் அஜ்மீர்களஞ்சியமும் மிரட்டி ஒப்பந்த பத்திரத்தில் சார்பதிவளார் அலுவலகத்தில் மிரட்டி கையொப்பம் பெற்றதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் மிரட்டி கையெழுத்து வாங்கியது சம்மந்தமாக நான் யாரிடமாவது புகார் எதுவும் கொடுத்தேனா என்றால்

SPCID போலீசார் செல்வராஜ் என்பவரிடம் பெரோஸ்கான் மற்றும் அஜ்மீர்களஞ்சியம் ஆகியோர்கள் மிரட்டி என்னிடம் கையெழுத்து வாங்கியதாக வாய்மொழியாக சொன்னேன் அதற்கு அவர் எழுத்து மூலமாக புகார் கொடுக்க வேண்டும் என்று சொன்னதால் அதன் பின்பு சுமார் 6 மாத காலத்தில் வாதிகள் பிரச்சனை செய்யவே SP அலுவலகத்தில் புகார் கொடுத்தேன். எப்போது நான் SP அலுவலகத்தில் புகார் கொடுத்தேன் என்றால் 2021ம் வருடம் புகார் கொடுத்தேன். வாதி தரப்பில் தாவா சொத்தில் கல்லுக்கால் ஊன்றி வேலி போட முயற்சித்த போது தான் நான் SP அலுவலகத்தில் புகார் கொடுத்தேன். மேற்படி வாதி கல்லுக்கால் ஊன்றிய விவரத்தை என்னுடைய எதிருரையிலோ, நிருபண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. SP அலுவலகத்தில் நான் கொடுத்த புகாரின் பேரில் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றால் என்னையும் வாதி தரப்பினரையும் அழைத்து பேசினார்கள். அதன்பின்பு வாதி மீது நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. ஆனால் அதன்பின்பு வாதி விசாரணைக்கு வராமல் இவ்வழக்கை தாக்கல் செய்துவிட்டார். போலீசார் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதால் நானாவது மேற்படி ஒப்பந்த பத்திரம் செல்லாது என்று நீதிமன்றத்தில் நான் வழக்கு எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் நான் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை. வாதி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பாக்கி தொகை ரூ.10,000/- ஐ பெற்றுக்கொண்டு தாவா சொத்தை கிரையம் செய்து தருமாறு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். மேற்படி வழக்கறிஞர்அறிவிப்பிற்கு நான் பதிலறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் பதிலறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. பிவாசா.4 மற்றும் 5 Statement of Account எதற்காக தாக்கல்செய்தேன் என்றால் வாதியிடம் நான் பெற்ற கடனுக்காக என்னால் செலுத்தப்பட்ட வட்டிக்கான ஆவணம் ஆகும். நான் தாக்கல் செய்த Statement of Account க்கும் தாவா ஒப்பந்த பத்திரத்திற்கும் அதில் உள்ள தொகைக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தை கிரையம் செய்வதற்காக வாதி மகன் பெரோஸ்கான் மற்றும் அவரது நண்பர் அஜ்மீர்களஞ்சியம் என்பவரிடமும் பேசி 15.03.2019ல் ரூ.10,00,000/- பெற்றுக்கொண்டு பாக்கி ரூ.10,000/-ஐ இரண்டு வருட தவணையில் பெற்றுக்கொள்வதாக ஒரு கிரைய ஒப்பந்தம் பத்திரம் ஏற்படுத்திக்

கொடுத்தேன் என்றால் சரியல்ல. அதன்பின்பு அஜ்மீர்களஞ்சியம் வாதிக்கு 23.04.2024ல் அவர் கொடுத்த தொகைக்கு ஆதரவாக Notary Public முன்னிலையில் ஒரு சம்மத பத்திரம் வாதிக்கு எழுதிக்கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சட்டப்படி நான் வாதியிடமிருந்து ரூ.10,000/- பெற்றுக்கொண்டு கிரய பத்திரம் எழுதிக்கொடுக்க வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

சாட்சி சொல்லியபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, கையொப்பமிடப்பட்டுள்ளது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2025.09.23 16:27:50 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**சிவகங்கை.**